திருக்கிறது என்பதனை இந்தப் புத்தகத்தினுடைய 35 வது தொகுப்பும் வெளியிடுகிறது. ஆதலாலே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து தினகரன் ஆசிரியர் அவர்களிடம் விளக்கம் பெற்று, அதன் பின்னர் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. இரா. மோகன் : ** **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்து அது எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்க வேண்டும் என்பதுதான் மரபு. ஒரு உரிமைப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே 'நான் கொடுத்த உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று ?' என்று கேட்டார்கள். அதிலே விளையாடுவது நல்லதில்லை. எனவே திரு. இரா.மோகன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை அவைக் குறிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர் இரா. மோகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

5. கவன ஈர்ப்பு.

கோவை வசந்தா மில், ஜனார்த்தனா மில் மற்றும் திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர் கே. ரமணி அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவருக்குப் பதிலாக திருவாளர் சி. கோவிந்தசாமி அவர்கள் அதை செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் உட

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

னடி நிவாரணமாக ரூ. 250 வீதம் கொடுக்க 1–3–1989 அரசு உத்தரவில் கோவை வசந்தாமில், ஜனார்த்தனாமில், திருப்பூரில் உள்ள தமிழ்நாடு ஸ்பின்னிங் மில் தொழிலாளர்கள் சேர்க்கப் படாமல் விடுபட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

1983 ஆம் ஆண்டு திருப்பூர் ராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 500 வீதம் நிதி உதவி வழங்கப்பட்டது.

1984 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள மூடப்பட்ட ஆலைகளின் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவா ரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது :

1. பத்மா மில்ஸ், கோயம்புத்தூர்—110 பேர்.

2. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்—250 பேர்.

3. ஜனார்த்தனா மில்ஸ், கோயம்புத்தூர்—659 பேர்.

1985 ஆம் ஆண்டு கீழ்க்காணும் ஆலைகளின் தொழி லாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது :

1. ஸ்ரீஹரி மில்ஸ், கோயம்புத்தூர்—657 பேர்.

2. இந்தியா போர்ஜ் ஆண்டு டிராப் ஸ்டாம்பிங் எக்குப்மெண்ட்ஸ், சென்னை—498 பேர்.

3. வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர்—1,351 பேர்.

1989 ஏப்ரல் 5] [திரு. பொன் முத்துராமலிங்கம்]

இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்—400 பேர்

மினி சிமெண்ட் பேக்டரி, மதுவத்தூர், திருச்சி மாவட்டம்—72 பேர்.

இதன்பின் மூடப்பட்ட துணி ஆலைகள் மற்றும் பொறியியல் நிறுவனங்களைச்சார்ந்த தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்களிடமிருந்து முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதிஉதவி கோரி பல விண்ணப்பங்கள் வந்தன. தனித் தனியான இந்த விண்ணப்பங்களை ஆய்ந்தபோது இதற்கு முந்திய அரசு கீழ்க்கண்டவாறு முடிவு எடுத்தது :

''மூடுதலின் காரணத்தினாலோ அல்லது கதவடைப்பு செய்த காரணத்தினாலோ இயங்காமல் இருக்கும் தனியார் நிறுவனங்களின் சுமையை அரசு ஏற்கத் தேவையில்லை. இதற்காக அரசு எந்த பொறுப்பும் எடுக்க வேண்டியது இல்லை. மேலும் இம்மாதிரியான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக முதலமைச்சர் பொது நிவாரணநிதி ஏற்படுத்தப் படவில்லை''.

'' முதலமைச்சர் நிவாரண நிதியை எந்தெந்த இனங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதற்கு வரன் முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆலைகள் மூடப்படுவதால் பாதிக் கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் அளிக்க விதிமுறைகளில் இடம் இல்லை. முன்பு சில ஆலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி நேர்வாக கருதி நிவாரணம் அளிக்கப்பட்டதை அடிப்படையாகவும், எடுத்துக் காட்டாகவும் வைத்துக் கொண்டு இப்பொழுது தமிழ்நாட்டில் அரசுக்கு எவ்வித தொடர்பும் இல்லாமல் மூடப்பட்டு கிடக்கும் நிறுவனங்களில் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர் அனைவருக்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொகை அளிக்க வேண்டும். என்ற கோரிக்கைகள் அடிக்கடி தொடர்ந்து வந்த வண்ணம் இருக்கின்றன. இப்படி கொடுத்துக் கொண்டே போனால் முதலமைச்சர் நிவாரண நிதி முழுவதும் கரைந்துவிடும். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது நலம் பயக்கும்.'' '' இனி இப்படி வரும் கோரிக்கைகளை முதற் கட்டத்திலேயே நிராகரித்து விடலாம்''.

இக்காரணங்களால் மூடப்பட்ட பல துணி ஆலைகள் மற்றும் தொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கு 1986-ஆம் ஆண்டுக்குப் பிறகு நிதி உதவி வழங்கப்படவில்லை. மூடிய துணி ஆலைகளையும் தொழில் நிறுவனங்களையும் மீண்டும் திறந்து இயக்க நடவடிக்கை எடுக்கும் என்ற கொள்கையை இவ்வரசு

அறிவித்துள்ளது. இம்மாதிரியான தனிப்பட்ட நிறுவனங்களின் பிரச்சினைகளை தீவிரமாக பரிசீலித்து வருகிறது. அதே சமயம் மூடப்பட்ட துணி ஆலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் இவ்வரசு உணர்ந்தது. அதன்படி பாதிக்கப்பட்ட சுமார் 12,000 தொழிலாளர்கள் பயன் அடையுமாறு ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 250 வீதம் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 30 இலட்சம் வரை வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது.

8. இவ்வாறு நிதி உதவி வழங்கும் பொருட்டு மூடப்பட்ட துணி ஆலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பட்டியலை ஆய்ந்து இதுவரை ஒருமுறைகூட நிதி உதவி பெறாத தொழிலாளர்களுக்கு மட்டும் நிதி உதவி வழங்கலாம் என அரசு முடிவு செய்தது. கோயம்புத்தூர் வசந்தா மில்ஸ் மற்றும் ஜனார்த்தனா மில்ஸ் மற்றும் திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய ஆலைகளின் தொழிலாளர்களுக்கு முன்பே நிதி உதவி வழங்கிவிட்டபடியால், தற்போது நிதிஉதவி வழங்க அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. சம்பந்தப்பட்ட இந்த 3 மில்களும் நீண்ட நாட்களாக மூடிக்கிடக்கின்ற காரணத்தினாலே உதவித் தொகை வழங்கி 4, 5 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற காரணத்தினால் இந்தத் தொழிலாளர்கள் மிகவும் கடுமையான பட்டினியில் இருக்கின்றார்கள். அந்தக் காரணத்தினாலே அரசு மீண்டும் அதைப் பரிசீலித்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்க முடியாத நிலை இருக்கிறது. எந்த உதவியும் பெறாத நிலையிலே உள்ள தொழிலாளர்களுக்குத்தான் முதலமைச்சரின் ஆணையின்படி இந்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே பிரத்தியேகமான முக்கியமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் ஏதாவது இருந்தாலொழிய. இந்த நிலையில் அரசு. அந்த 3 மில்களின் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கான காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.